


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி


Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 50 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 11 – வியாழக்கிழமை 28 செப்டம்பர் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 50: Thiruvalluvar Year - 2054 - Purattasi 11 - Thursday 28 September 2023 - Trichy ★★ 16 Pages ₹5.00


## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டையொட்டி சென்னையில் அக். 14 அன்று

# மகளிர் உரிமை மாநாடு!



## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை; திருமதி சோனியா காந்தி - பிரியங்கா காந்தி - ‘இந்தியா’ கூட்டணி மகளிர் தலைவர்கள் சிறப்புரை! கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிவிப்பு!

**சென்னை, செப். 28 -**

**“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை”யொட்டி, மகளிர் அணி முன்னெடுக்கும் ‘மகளிர் உரிமை மாநாடு’ அக்டோபர் 14 அன்று நடைபெறுகிறது என்றும், கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றிட, அன்னை சோனியா காந்தி - திருமிகு. பிரியங்கா காந்தி உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் மகளிர் தலைவர்கள் சிறப்புரையாற்ற இருக்கிறார்கள் என்றும் கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

அனைத்துத் துறைகளிலும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பெண்ணுரிமைக்காகவும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் மகத்தான பணிகளை ஆற்றியுள்ளார். அவர்தான், அரசு வேலைவாய்ப்பிலும் உள்ளாட்சித் தேர்தலிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு, ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்குச் சொத்துரிமை உள்ளிட்டவற்றை திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் முதலமைச்சராக இருந்து சட்டமாக்கினார்.

தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் வாயிலாக, “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்”, “பெண்களுக்குக் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம்”, “புதுமைப் பெண் திட்டம்”, “மகளிர் சுய உதவிக் குழுக்கள்”, “மகளிரை அர்ச்சகராக்கியது” என, பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை அடுத்தடுத்துச் செயல்படுத்தி வருகிறார்.





**மகளிர் மசோதா அமலுக்கு வராத நிலை!**

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்ட கால கோரிக்கை. அத்தகைய மகளிர் இடஒதுக்கீடு மசோதா, ஒன்றிய பா.ஜ.க. அரசின் 9 ஆண்டுகால மறதிக்குப் பிறகு நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. ஆனால் அதுவும், மக்கள்தொகை கணக்கெடுப்பு, தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட காரணங்களால் உடனடியாக அமலுக்கு வர முடியாத நிலையில், 2029ஆம் ஆண்டு வரும் எனத் தெரிவித்துள்ளனர். அதுவும் நிச்சயமற்றதாக உள்ளது.

எனவே, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை உடனே அமல்படுத்துவது உள்ளிட்ட பெண்ணுரிமைத் தொடர்பான கருத்துரையாடலை முன்னெடுப்பதை காலத்தின் தேவையாகக் கருதி, கழகத் தலைவர் முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், கழக மகளிர் அணி சார்பில் வருகின்ற 14.10.2023 (சனிக்கிழமை) அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் ‘மகளிர் உரிமை மாநாடு’ பிரமாண்டமாக நடைபெற உள்ளது.

**அனைத்து மகளிர் சகோதரிகள் பங்கேற்பு!**

இந்த மாநாட்டில் பங்கேற்க கழகத் தலைவர் தளபதி அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், தலைவர் கலைஞரால் “இந்திராவின் மருமகளே வருக” என வரவேற்கப்பட்டவருமான அன்னை சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் சுப்ரியா சுலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் தோழர் சுபாஷினி அலி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான தோழர் ஆனி ராஜா உள்ளிட்ட INDIA கூட்டணியின் பல்வேறு முக்கிய அகில இந்தியத் தலைவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

பெண்ணுரிமைப் போற்றும் இந்த மாநாட்டில் கழக மகளிர் அணியைச் சார்ந்த அனைவரும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிர் சகோதரிகளும் கலந்துகொள்ள வேண்டும் என அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### காவிரியில் விநாடிக்கு

## 12,500 கனஅடி நீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிடுக!

### ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தல்!

*புதுடெல்லி, செப். 28 -*

காவிரியில் விநாடிக்கு 12ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என்று, ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடகா மறுத்துவரும் நிலையில், டெல்லியில் கடந்த 18ம் தேதி காவிரி மேலாண்மை ஆணையத்தின் அவசரக் கூட்டம் அதன் தலைவர் எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு அடுத்த 15 நாட்களுக்கு விநாடிக்கு 5 ஆயிரம் கன அடி நீர் திறக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடப்பட்டது.

மேலும், காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் அடுத்த கூட்டம் செப்டம்பர் 26ம் தேதி நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் காவிரி ஒழுங்காற்றுக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை செயலாளர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழில் நுட்ப குழு தலைவர் சுப்பிரமணியன், திருச்சி மண்டல தலைமை பொறியாளர் சுப்பிரமணியம் மற்றும் கர்நாடகா, புதுச்சேரி, கேரளா அதிகாரிகள் பங்கேற்றனர். காவிரியில் தமிழ்நாட்டிற்கு விநாடிக்கு 12 ஆயிரத்து 500 கன அடி நீர் திறந்துவிட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், அக்டோபர் மாதம் திறக்க வேண்டிய 20 புள்ளி 22 டி.எம்.சி நீரை உரிய நேரத்தில் திறக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள 7 டி.எம்.சி நீரையாவது உடனடியாக திறந்து விட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

## அண்ணல் காந்தி பிறந்த நாள் - அக். 2-ல் கிராம சபைக் கூட்டங்கள்!

*சென்னை, செப். 28 -*

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், அக்டோபர் 2ஆம் தேதி காந்தி ஜெயந்தி அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கிராம சபை கூட்டத்தில், கிராம ஊராட்சி நிர்வாகம், பொது நிதி செலவினம், திட்டப் பணிகள் குறித்து விவாதிக்க வேண்டும், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கையை பார்வைக்கு வைத்து ஒப்புதல் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு நடவடிக்கைகள், டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்தும் விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

---

### இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்

## எலக்ட்ரிக் வாகனங்கள் உற்பத்தி அதிகரிப்பு!

சென்னை, செப். 28 -

இந்தியாவில் நடப்பாண்டு விற்பனை செய்யப்பட்ட 10 லட்சம் எலக்ட்ரிக் வாகனங்களில், 4 லட்சம் வாகனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் ஆட்டோமொபைல் தலைநகராகக் கருதப்படும் தமிழ்நாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் அதே வேளையில், எலக்ட்ரிக் வாகன உற்பத்தி மற்றும் விற்பனைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் எலக்ட்ரிக் வாகன உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை வெளியிட்டுள்ள புள்ளி விபரத்தில், கடந்த செப்டம்பர் 20ம் தேதி வரையிலான ஓராண்டு காலத்தில், இந்தியாவில் 10 லட்சத்து 44 ஆயிரத்து 600 எலக்ட்ரிக் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் 40 சதவீதம், அதாவது சுமார் 4 லட்சத்து 10 ஆயிரம் வாகனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை மற்றும் சேலம் ஆகிய 6 நகரங்கள் மின்சார வாகன மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள எலக்ட்ரிக் வாகன தொழிற்சாலையில் இருந்து அதிக அளவிலான வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### உலகளாவிய நிதி நெருக்கடியின் போது - அர்ப்பணிப்புடன் செயல்பட்டு

## இந்தியாவின் எதிர்காலத்தை மறு வடிவமைத்தவர் மன்மோகன் சிங்!

### பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, செப். 28 -**

**உலகளாவிய நிதி நெருக்கடியின் போது அர்ப்பணிப்புடன் செயல்பட்டு, இந்தியாவின் எதிர்காலத்தை மறு வடிவமைத்தவர் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் என்று அவரது பிறந்த நாளையொட்டி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.**

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்! உலகளாவிய நிதி நெருக்கடியின் போது, பிரதமராக அவரது தலைமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளுக்கான அர்ப்பணிப்பு இந்தியாவின் எதிர்காலத்தை மறுவடிவமைத்தது. அவரது ஆர்ப்பாட்டமில்லாத, அறிவார்ந்த மற்றும் பணிவான அணுகுமுறை எக்காலத்திலும் தலைமைத்துவத்திற்கு மதிப்புமிக்க படிப்பினைகளை வழங்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.**

**முன்னேற்றம் மற்றும் நிலையான ஆட்சிக்காக என்றும் அவர் நினைவுகூரப்படுவார். இன்னும் பல்லாண்டுகள் அவரது சிந்தனைகள் நமக்கு ஊக்கமளிக்கட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.